# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதிவிசேஷமானது

අංක 2010/2 - 2017 මාර්තු මස 13 වැනි සඳුදා - 2017.03.13

*2010/2 ஆம் இலக்கம் - 2017 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 13 ஆந் திகதி திங்கட்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I : தொகுதி (I) – பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

**தேசிய அரசுப் பேரவையின் 1972 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, காணிச் சீர்திருத்தச் சட்டம்**

27(அ) ஆம் பிரிவில் உப பிரிவு (4) இன் கீழான கட்டளை

*1981 ஆம் ஆண்டின் 39 ஆம் இலக்க, காணிச் சீர்திருத்த (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தில் திருத்தம் செய்யப்பட்ட தேசிய அரசுப் பேரவையின் 1972 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, காணிச் சீர்திருத்த சட்டத்தில் பிரிவு 27 அ(4) ஆம் பிரிவினால் என்கு உரித்தாக்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம், காணி அமைச்சர் ஜோன் அன்தனீ எம்மானுவெல் அமரதுங்க ஆகிய நான், இக்கட்டளை மூலம்*

(அ) *1972 ஆம் ஆண்டின் II ஆம் இலக்க, அரச கமத்தொழில் கூட்டுத்தாபனங்கள் சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபையிடம் கையளிக்கப்பட்டுள்ள, இக்கட்டளையில் முதலாம் அட்டவணையில் விபரமாக காட்டப்படுகின்றதும், ஹுட்வில் வத்தை அல்லது ஹைட்வில்லை வத்தை என்று அழைக்கப்படும் மற்றும் குறிப்பிடப்படும் காணியுடன் தொடர்புடைய 1982 ஆம் ஆண்டு மே மாதம் 31 ஆந் திகதிய 195/6 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 1972 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க காணிச் சீர்திருத்த சட்டத்தின் 27அ(1) ஆம் பிரிவின் படி செய்யப்பட்ட கட்டளையில், இங்கு இரண்டாவது அட்டவணையில் குறித்துக் காட்டப்பட்டுள்ள ஹுட்வில் வத்தை அல்லது ஹைட்வில்லை வத்தை என்ற காணியின் நிலப்பகுதிக்கு ஏற்புடையதாகும் பகுதி, மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபையிடம் கையளிப்பதற்கு கவனத்திற் கொள்வதற்கான கட்டளைகளுக்கும் நிபந்தனைகளுக்கும் அமைவாக செயற்படாமை என்ற அடிப்படையில், இரத்துச் செய்வதன் மூலம் அந்தக் கட்டளையை திருத்தம் செய்கின்றேன்; மற்றும்*

(ஆ) *இந்த இரத்துச் செய்தலுக்கமைவாக இக்கட்டளையில் இரண்டாவது அட்டவணையில் குறித்துரைத்துக் காட்டப்பட்டுள்ள காணி அளவினை காணிச் சீர்திருத்த ஆணைக்குழுவிடம் மீண்டும் கையளிக்கப்படுவதாக இத்தால் வெளிப்படுத்துகின்றேன்.*

ஜோன் அன்தனீ எம்மானுவெல் அமரதுங்க,
காணி அமைச்சர்.

காணி அமைச்சு,
காணிச் செயலகம்,
"மிஹிகத்த மெதுர",
இல. 1200/6, இராஜமல்வத்தை வீதி,
பத்தரமுல்லை,
*2017.02.07.*


1A - G25261 - 37 (2017/3)

*இவ் அதிவிஷேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

**முதலாவது அட்டவணை**

மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபையிடம் கையளிக்கப்பட்டுள்ள ஹுட்வில் வத்தை அல்லது ஹைட்வில்லை வத்தை என்ற காணியின் விபரம்

| *அதிவிசேட வர்த்தமானியின் இலக்கமும் திகதியும்* | *தோட்டக் காணியின் பெயர்* | *நிர்வாக மாவட்டம்* | *பிரதேச செயலகப் பிரிவு* | *மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபையிடம் கையளிக்கப்பட்டுள்ள காணியின் அளவு (ஹெக்டயார்)* |
|---|---|---|---|---|
| 1982.05.31 ஆந் திகதிய 195/6ஆம் இலக்க | ஹுட்வில் வத்தை அல்லது ஹைட்வில்லை வத்தை | நுவரெலியா | நுவரெலியா | 488.25 |

**இரண்டாவது அட்டவணை**

காணித் சீர்திருத்த ஆணைக்குழுவிடம் மீண்டும் கையேற்கப்படும் காணிப் பகுதியின் விபரம்

| *விசேட இலக்கம்* | *காணியின்பெயர்* | *நிர்வாக மாவட்டம்* | *பிரதேச செயலகப் பிரிவு* | *கிராம அலுவலர் பிரிவு(கிராமம்)* | *ஆணைக்குழுவிடம் கையளிக்கப்படும் காணிகளின் அளவு* |
|---|---|---|---|---|---|
| கொ/695 11/PCE/ NE/88 | ஹுட்வில் வத்தை அல்லது ஹைட்வில்லை வத்தை | நுவரெலியா | நுவரெலியா | ஆக்கரபத்தனை | மத்திய மாகாணத்தில் நுவரெலியா மாவட்டத்தில் நுவரெலியா பிரதேச செயலகப் பிரிவில் திம்புல கோரளை சிறுபிரிவில் ஆக்கரபத்தனை எனும் கிராமத்தில் அமைந்துள்ள் ஹுட்வில் வத்தை அல்லது ஹைட்வில்லை வத்தை எனும் காணிக்காக அதிகாரம் பெற்ற நில அளவையாளர் திருமதி சுமங்கலீ சுப்பிரமணியம் அவர்களின் இலக்கம் 4091/ 2017 மற்றும் 2017.01.27 ஆந் திகதிய வரைபடத்தில் காணித்துண்டு இலக்க 01 முதல் 71 வரை காட்டப் பட்டுள்ள 03 ஏக்கர் 0 றூட் 17 பேர்ச்சஸ் (1.2567 ஹெக்ட யார்) அளவுகொண்ட காணிப் பகுதியின் எல்லைகள்.<br><br>வடக்கு : ஹுட்வில் வத்தை அல்லது ஹைட்வில்லை வத்தையும் வீதியும்<br>கிழக்கு : வீதி<br>தெற்கு : வீதி<br>மேற்கு : வீதியாகும். |

03- 1138